**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
In the Court of District Munsif-cum-Judicial Magistrate Court, Vedaranyam.

**S.T.C. No. 15/2021**

| | | |
|---|---|---|
| L.W. P.W.:1 | | |
| D.W. : | | |
| Name : | **இராஜகோபால்** | Caste : |
| Father's Name : | நாராயணசாமி | Calling : |
| Village: | | Religion : |
| Taluk : | | Age : 44/2023 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 26.05.2023.

(எதிரி ஆஜர்.)

**மறு விசாரணை:**

எனது வழக்கிற்கு ஆதரவாக கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1) ம.சா.ஆ.9 - 01.04.2020 முதல் 27.04.2022 நாள் வரையிலான எனது பாரத ஸ்டேட் வங்கி பாஸ்புத்தகத்தின் நகல்.

2) ம.சா.ஆ.10 - 01.04.2020 முதல் 21.04.2022 நாள் வரையிலான எனது கரூர் வைஸ்யா வங்கி பாஸ்புத்தகத்தின் நகல்.

3) ம.சா.ஆ.11 - Z - 274 திருவிடைமருதூர் தொடக்க வேளாண்மை கடன் சங்க செயலாளர் வழங்கிய சான்று அசல்.

4) ம.சா.ஆ.12 - 31.10.2021ஆம் தேதியிட்ட தமிழ்நாடு அரசு வழங்கிய விவசாய கடன் தள்ளுபடி சான்றிதழின் நகல். (3 எண்ணிக்கை)

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் தாக்கல் செய்த வங்கி ஆவணங்களில் 14.11.2020ஆம் தேதி மற்றும் அதற்கு ஒரு வாரத்திற்கு முன்னரோ பெரும் தொகை எடுத்ததற்கான ஆதாரம் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி ஆவணங்களில் 14.11.2020ஆம் தேதி எனது வங்கி கணக்கில் ரூ.5 லட்சம் இருப்பு இல்லை என்றால் சரி. எனது முதல் விசாரணை மற்றும் புகாரில் நான் வங்கியில் இருந்து ரூ.3 லட்சமும், கையில் இருந்து ரூ.2 லட்சம் சேர்த்து ரூ.5 லட்சம் கடன் கொடுத்ததாக

சொல்லவில்லை என்றால் சரி. ம.சா.ஆ.11 - Z - 274 திருவிடைமருதூர் தொடக்க வேளாண்மை கடன் சங்க செயலாளர் வழங்கிய சான்று அசல் இவ்வழக்கிற்கு சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. ம.சா.ஆ.12 - 31.10.2021ஆம் தேதியிட்ட தமிழ்நாடு அரசு வழங்கிய விவசாய கடன் தள்ளுபடி சான்றிதழின் படி எனக்கு நிவாரணம் பெறுவதற்கோ தகுதியுடையவர் என்று நான் கருதப்பட்ட நிலையில நான் எதிரிக்கு விவசாய வருமானத்தை கடனாக கொடுத்தேன் என்று சொல்வது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் G.A.Contractors நிறுவனத்திற்கு நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரி.

இவ்வழக்கு காசோலையை 14.11.2020ஆம் தேதி எதிரி கொடுத்தார். எனது வீட்டிற்கு வரும்போது காசோலையை எடுத்து வந்தார். கடன் வாங்குவதற்கு ஒரு வாரத்திற்கு முன்பு எதிரி பணம் கேட்டார். எதிரி தனது மேற்படியான கம்பெனிக்கு பணம் தேவைப்படுவதாக கேட்டு மேற்படி கடனை பெற்றார். கம்பெனிக்காக எதிரி வாங்கிய கடனை தனிப்பட்ட முறையில் எதிரியிடம் கேட்கமுடியாது என்று சொன்னால் சரியல்ல.